# PROVISIONAL ANSWER KEY

| | |
|---|---|
| Question Paper Code: | 144/2026/OL |
| Category Code: | 569/2025,636/2025 |
| Exam: | Boat Driver |
| Date of Test | 19-08-2026 |
| Department | Various/Irrigation |
| Language: | Tamil |

Question1:-உள்நாட்டு நீர்வழிக் கப்பல்கள் சட்டம், 2021-ன் கீழ் உள்ள விதிகள் எத்தனை அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன ?

A:-X

B:-XV

C:-XX

D:-XVIII

Correct Answer:- Option-D

Question2:-உள்நாட்டு நீர்வழிக் கப்பல்கள் சட்டம், 2021-ன் படி, 1.5 மீட்டர் அலை உயரம் கொண்ட உள்நாட்டு நீர்ப்பகுதிகள் எந்த மண்டலத்தில் (zone) சேர்க்கப்பட்டுள்ளன ?

A:-மண்டலம் 1

B:-மண்டலம் 2

C:-மண்டலம் 3

D:-மேற்கூறிய எதுவும் இல்லை

Correct Answer:- Option-A

Question3:-உள்நாட்டு நீர்வழிக் கப்பல்கள் சட்டம் 2021-ன்படி, 'இந்திய உள்நாட்டு நீர்வழிக் கப்பல் ஆணையம்' (Inland Vessel Water Ways Authority of India) எத்தகைய அதிகாரத்தைக் கொண்டுள்ளது?

A:-ஆய்வுக் குழு

B:-தகுதிவாய்ந்த அதிகாரம்

C:-ஆய்வு முகமை

D:-நியமிக்கப்பட்ட அதிகாரம்

Correct Answer:- Option-B

Question4:-
எந்தச் சட்டத்தின் கீழ் 111 நீர்வழிகள் தேசிய நீர்வழிகளாக அறிவிக்கப்பட்டன ?

A:-I.W.A.I. சட்டம், 1985

B:-வணிகக் கப்பல் போக்குவரத்துச் சட்டம், 1958

C:-தேசிய நீர்வழிகள் சட்டம், 2016

D:-மாநிலங்களுக்கு இடையிலான நீர்வழிகள் சட்டம், 1977

Correct Answer:- Option-C

Question5:-
குழாய் இணைப்புகளின் பிணைப்புகளை முழுமையாக அகற்றுவதற்கு முன் எதை உறுதி செய்ய வேண்டும்?

A:-
இயந்திரம் நிறுத்தப்பட்டிருப்பதை

B:-அழுத்தம் ஏதும் இல்லை என்பதை

C:-தலைமைப் பொறியாளர் வருவதை

D:-எச்சரிக்கை மணி ஒலித்திருப்பதை

Correct Answer:- Option-B

Question6:-கப்பலில் உள்ள மூடிய பகுதிக்குள் நுழையும்போது, அப்பகுதியில் ஆக்சிஜனின் சதவீதம் எவ்வளவு இருக்க வேண்டும்?

A:-10%

B:-20%

C:-50%

D:-25%

Correct Answer:- Option-B

Question7:-
உள்நாட்டு நீர்வழிக் கப்பல்கள் (உயிர்காக்கும்சாதனங்கள்) விதிகள் அமலாக்க

நோக்கத்திற்காகக் கப்பல்கள் எத்தனை வகைகளாகப் (classes) பிரிக்கப்பட்டுள்ளன ?

A:-V

B:-II

C:-III

D:-IV

Correct Answer:- Option-C

Question8:-கப்பலின் உடல்பகுதியில் (hull) வேலை ஏதும் இல்லாத நிலையில், தீயணைப்புப் பாதைக்கு (fire line) எத்தனை ஹைட்ரண்டுகள் (hydrants) தயாராக இருக்க வேண்டும் ?

A:-1

B:-3

C:-2

D:-4

Correct Answer:- Option-C

Question9:-1917- ஆம் ஆண்டின் உள்நாட்டு நீர்வழிக் கப்பல்கள் சட்டத்திற்குப் பதிலாக உள்நாட்டு நீர்வழிக் கப்பல்கள் சட்டம், 2021 கொண்டு வரப்பட்டதற்கான முக்கிய காரணம் என்ன ?

A:-

நவீன மயமாக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த ஒழுங்குமுறை அமைப்பைச் செயல்படுத்த

B:-பதிவு முறையை நீக்க

C:-நீர்வழிகள் மீதான கட்டுப்பாட்டை நீக்க

D:-பாதுகாப்பு ஆய்வுகளைக் குறைக்க

Correct Answer:- Option-A

Question10:-

பின்வருவனவற்றுள் எது கப்பலில் பயன்படுத்தப்படும் கைக்கருவி (hand tool) அல்ல ?

A:-சிலிண்டர் லைனர்

B:-

கிராங்க்ஷாஃப்ட்

C:-கனெக்டிங்ராட்

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-D

Question11:-வெளிப்புற எரிப்பு இயந்திரத்திற்கு (External combustion engine) உதாரணம் எது ?

A:-பெட்ரோல் இயந்திரம்

B:-டீசல் இயந்திரம்

C:-நீராவி இயந்திரம்

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-C

Question12:-
சிறிய நீர்சார்ந்த வாகனங்களில் (watercraft), பொதுவாக எந்த இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது?

A:-டீசல்/பெட்ரோல் இயந்திரம்

B:-கனரக எண்ணெய் இயந்திரம்

C:-நீராவி இயந்திரம்

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-A

Question13:-இயந்திரத்தின் மிகக் கனமான பகுதி எது ?

A:-சிலிண்டர்

B:-லைனர்

C:-பிளாக்

D:-
பிஸ்டன்

Correct Answer:- Option-C

Question14:-
2-ஸ்ட்ரோக் இயந்திரத்தின் ஃப்ளைவீல் எவ்வாறு இருக்கும் ?

A:-சிறியது

B:-பெரியது

C:-நடுத்தரமானது

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-A

Question15:-உயவு அமைப்பின் (lubrication system) பங்கு என்ன ?

A:-உராய்வைக் குறைத்தல்

B:-தேய்மானத்தைக் குறைத்தல்

C:-தூசியை அகற்றுதல்

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-D

Question16:-இயந்திரக் குளிர்விப்பு அமைப்பாக (cooling system) பின்வருவனவற்றில் எது பயன்படுத்தப்படுகிறது ?

A:-எண்ணெய்

B:-நீர்

C:-காற்று

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-D

Question17:-டீசல் இயந்திரத்தின் சிறப்பு அம்சம் என்ன ?

A:-பெரிய அளவு

B:-அதிக விலை

C:-A மற்றும் B இரண்டும் சரி

D:-A மற்றும் B இரண்டும் தவறு

Correct Answer:- Option-C

Question18:-ரேடாரின் பயன்பாடு என்ன ?

A:-திசையை மாற்றுதல்

B:-தொலைவில் உள்ள பொருட்களைப் பார்த்தல்

C:-A மற்றும் B இரண்டும் சரி

D:-A மற்றும் B இரண்டும் தவறு

Correct Answer:- Option-A

Question19:-இயந்திரத்தில் ஏற்படும் தீயை அணைக்க எது பயன்படுத்தப்படுகிறது ?

A:-நீர்

B:-மணல்

C:-
கார்பன் டை ஆக்சைடு

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-C

Question20:-வெப்பநிலையை அளவிட ______________ பயன்படுத்தப்படுகிறது ?

A:-கேலிப்பர்ஸ்

B:-தெர்மோமீட்டர்

C:-மைக்ரோமீட்டர்

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-B

Question21:-________________ பம்பிற்கு 'பிரைமிங்' (priming) தேவையில்லை.

A:-மையவிலக்கு (Centrifugal) பம்பு

B:-பாசிட்டிவ் டிஸ்பிளேஸ்மென்ட் பம்பு

C:-
கியர் பம்பு

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-B

Question22:-கிராங்க்ஷாஃப்ட் (crankshaft) எதனால் செய்யப்படுகிறது ?

A:-மைல்டு ஸ்டீல்

B:-ஃபோர்ஜட் ஸ்டீல்

C:-துருப்பிடிக்காத எஃகு

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-B

Question23:-இன்லெட் வால்வுகள் (Inlet valves), எக்ஸ்ஹாஸ்ட் வால்வுகளை (exhaust valves) விட ______________ இருக்கும்.

A:-பெரியவை

B:-சிறியவை

C:-சமமானவை

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-A

Question24:-மறைமுகக் குளிர்விப்பு முறைக்கு (indirect cooling) பின்வருவனவற்றில் எது தேவைப்படுகிறது ?

A:-உப்பு நீரில் இயங்கும் நீர்வாகனங்கள்

B:-மாசுபட்ட நீரில் இயங்கும் நீர்வாகனங்கள்

C:-A மற்றும் B ஆகிய இரண்டும்

D:-எல்லாம் தவறு

Correct Answer:- Option-C

Question25:-
உந்துசுழலிகள் (Propellers) எதனால் செய்யப்படுகின்றன ?

A:-அலுமினியக் கலப்புலோகம்

B:-வெண்கலம்

C:-பித்தளை

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-D

Question26:-ஒரு ஓம் (ohm) மின்தடை கொண்ட கடத்தியில் ஒரு ஆம்பியர் (ampere) மின்னோட்டத்தை உருவாக்கும் மின் அழுத்தம் இவ்வாறு அழைக்கப்படுகிறது

A:-ஒரு வோல்ட் (volt)

B:-ஒரு கூலும்ப் (coulomb)

C:-ஒரு ஹெர்ட்ஸ் (hertz)

D:-ஒரு வெபர் (weber)

Correct Answer:- Option-A

Question27:-

ஓம் (ohm) பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) மின் தடையின் (electrical resistance) அலகு ஓம் (ohm) ஆகும்.

(ii) மின்மறுப்பின் (electrical impedance) அலகு ஓம் ஆகும்.

(iii) மின்தேக்குத் திறனின் (capacitance) அலகு ஓம் ஆகும்.

(iv) மின் தூண்டலின் (inductance) அலகு ஓம் ஆகும்.

A:-(i) மட்டும்

B:-(ii) மட்டும்

C:-(i & ii) மட்டும்

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-C

Question28:-

மின்சுற்றில் ஒரு வினாடியில் நிறைவு செய்யப்படும் சுழற்சிகளின் எண்ணிக்கை இவ்வாறு அழைக்கப்படுகிறது

A:-

அலைவுநேரம் (time period)

B:-

அதிர்வெண் (Frequency)

C:-வீச்சு (Amplitude)

D:-மின்ஆற்றல் (Electric energy)

Correct Answer:- Option-B

Question29:-

ஒரு கடத்தியின் வழியாக மின்சாரம் பாய்வதை எதிர்க்கும் பண்பு இவ்வாறு

அழைக்கப்படுகிறது

A:-emf

B:-கடத்துதிறன் (conductance)

C:-மின்னழுத்தம் (voltage)

D:-மின்தடை (resistance)

Correct Answer:- Option-D

Question30:-மின்னோட்டத்தின் (electric current) அலகு

A:-ஆம்பியர்

B:-வாட்

C:-ஜூல்

D:-ஓம்

Correct Answer:- Option-A

Question31:-ஒரு மின் அமைப்பின் காப்பு மின்தடையை (insulation resistance) அளவிடப் பொதுவாகப் பயன்படும் மின் அளவீட்டுக் கருவி

A:-வாட்மீட்டர்

B:-மெக்கர்

C:-வோல்ட்மீட்டர்

D:-

அதிர்வெண்மானி (Frequency meter)

Correct Answer:- Option-B

Question32:-ஈய-அமில மின்கலத்தில் (lead-acid battery) பயன்படுத்தப்படும் மின்பகுளி (electrolyte)

A:-நீர்த்த ஹைட்ரோகுளோரிக் அமிலம்

B:-நீர்த்த சல்பூரிக் அமிலம்

C:-நீர்த்த நைட்ரிக் அமிலம்

D:-பொட்டாசியம் ஹைட்ராக்சைடு

Correct Answer:- Option-B

Question33:-நிக்கல்-இரும்பு மின்கலத்தில், நேர்முனைத்தட்டு (positive plate) எதனால் ஆனது ?

A:-நிக்கல் எஃகுப் பட்டை

B:-பொட்டாசியம் ஹைட்ராக்சைடு

C:-நிக்கல் ஹைட்ராக்சைடு

D:-பொட்டாசியம் சல்பேட்

Correct Answer:- Option-C

Question34:-சாதாரண நிலையில் மின்னோட்டத்தை இணைக்கவும், கடத்தவும், துண்டிக்கவும் மற்றும் அசாதாரண நிலையில் மின்னோட்டத்தைத் துண்டிக்கவும் கூடிய இயந்திரவியல் சுவிட்ச் சாதனம் எது ?

A:-சோக்

B:-ரியோஸ்டாட்

C:-ஃப்யூஸ்

D:-சர்க்யூட் பிரேக்கர்

Correct Answer:- Option-D

Question35:-கேபிளைப் பதிக்கும்போது இயந்திரவியல் சேதத்திலிருந்து அதைப்பாதுகாக்க, 'பெட்டிங்' (bedding) பகுதிக்கு மேல் அமையும் கேபிளின் பகுதி எது ?

A:-சர்விங்

B:-ஆர்மரிங்

C:-உலோகஉறை

D:-காகிதப் பட்டை

Correct Answer:- Option-B

Question36:-

அதிக இழுவிசை வலிமை தேவைப்படும் மேல்நிலை மின்பாதைகளில் (overhead lines) பயன்படுத்தப்படும் கேபிள் இணைப்பு எது ?

A:-பிரிட்டானியா இணைப்பு

B:-ரேட் டெயில் இணைப்பு

C:-மேரிட் இணைப்பு

D:-ஏரியல் டெயில் இணைப்பு

Correct Answer:- Option-A

Question37:-
மின் விபத்தைத் தடுப்பது குறித்து பின்வரும் கூற்றுகளில் எது சரியல்ல?

(i) தகுதி வாய்ந்த நபர்கள் மட்டுமே மின்சார வேலைகளைச் செய்ய வேண்டும்

(ii) மின்னோட்டம் பாயும் மின்சுற்றில் (live circuit) வேலை செய்தல்

(iii) வேலை செய்யும் போது ரப்பர் பாயின் மீது நிற்றல்
(iv) மின்சுற்றை அணைத்த பிறகு மட்டுமே ஃப்யூஸை (fuse) அகற்றுதல்

A:-(i) மட்டும்

B:-(ii) மட்டும்

C:-(iii) மட்டும்

D:-(iv) மட்டும்

Correct Answer:- Option-B

Question38:-பின்வருவனவற்றுள் எது DC மோட்டாரின் வகை அல்ல ?

A:-
ஷன்ட் மோட்டார்

B:-சீரிஸ் மோட்டார்

C:-இண்டக்ஷன் மோட்டார்

D:-காம்பவுண்டு மோட்டார்

Correct Answer:- Option-C

Question39:-
எலக்ட்ரோலைட்டின் ஒப்பு அடர்த்தியை (specific gravity) அளவிடப் பயன்படுவது எது?

A:-ஹைக்ரோமீட்டர்

B:-ஹைட்ரோபோன்

C:-ஹிப்சோமீட்டர்

D:-ஹைட்ரோமீட்டர் (Hydrometer)

Correct Answer:- Option-D

Question40:-பேட்டரியை மின்னேற்றம் செய்யச் சிறந்த வகை விளக்கு எது ?

A:-சோடியம் ஆவி விளக்கு

B:-ஆர்க் விளக்கு

C:-இன்காண்டசென்ட் விளக்கு

D:-

கார்பன் இழை விளக்கு

Correct Answer:- Option-D

Question41:-உள்நாட்டு நீர்ப்பகுதிகளில் இயங்கும் எந்த வகையான கப்பல்கள் அல்லது படகுகளில், கழிவு அகற்றல் விதிமுறைகள் குறித்த தகவல்களைக் கொண்ட அறிவிப்புப்பலகை (placard) பொருத்தப்பட்டிருக்க வேண்டும் ?

A:-5 மீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள கப்பல்கள்

B:-10 மீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள கப்பல்கள்

C:-15 மீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள கப்பல்கள்

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-B

Question42:-'15 PPM' என்பதன் விரிவாக்கம் என்ன ?

A:-Particles per minute

B:-Pressure pump measurement

C:-Parts per million

D:-Parts per cubic metre

Correct Answer:- Option-C

Question43:-

படகுகள் அல்லது கப்பல்களை ஆய்வு செய்யும்போது, துறைமுக அதிகாரி அல்லது ஆய்வாளர் ஏன் முதன்மையாக 'எண்ணெய் பதிவுப் புத்தகத்தை' (Oil Record Book) கேட்கிறார் ?

A:-படகில் உள்ள பயணிகளின் எண்ணிக்கையைச் சரிபார்க்க

B:-

படகு சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்றுகிறதா என்பதை

உறுதிப்படுத்த

C:-படகின் வேகத்தைக் கணக்கிட

D:-பணியாளர்களின் ஊதிய விவரங்களை அறிய

Correct Answer:- Option-B

Question44:-ஹவுஸ்போட் (houseboat) எனப்படும் தங்கும் வசதி கொண்ட படகிலிருந்து கழிவுநீரை நேரடியாகக் காயல் நீர்நிலைகளிலோ (backwaters) அல்லது ஆறுகளிலோ வெளியேற்றுவது சட்டப்படி அனுமதிக்கப்படுமா ?

A:-ஆம், பகல் நேரத்தில் வெளியேற்றலாம்

B:-துறைமுகங்களில் மட்டுமே வெளியேற்றலாம்

C:-பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் வெளியேற்றலாம்

D:-இது அனுமதிக்கப்படக்கூடாது. கழிவுநீரைச் சுத்திகரிப்பு நிலையத்தில் முறையாகச் சுத்திகரித்து, கழிவுநீர் சேமிப்புத்தொட்டியில் சேமிக்க வேண்டும்.

Correct Answer:- Option-D

Question45:-கழிவுநீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரைச் சுத்திகரிக்கப் பயன்படும் 'STP' என்பதன் விரிவாக்கம் என்ன ?

A:-Sea Transport Protector

B:-Sewage Treatment Piping

C:-System Toxic Purification

D:-Sewage Treatment Plant

Correct Answer:- Option-D

Question46:-இயந்திர அறையில் கண்காணிப்புப் பணியில் (watchkeeping duty) இருக்கும் பணியாளர் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் எது ?

A:-படகில் உள்ள பயணச்சீட்டுகளைச் சரிபார்த்தல்

B:-படகின் வேகத்தைக் கட்டுப்படுத்துதல்

C:-இயந்திரங்களின் வெப்பநிலை மற்றும் அழுத்தத்தைக் கண்காணித்தல் மற்றும் எண்ணெய் கசிவு இல்லை என்பதை உறுதிப்படுத்துதல்

D:-ரேடியோ செய்திகளுக்குப் பதிலளித்தல்

Correct Answer:- Option-C

Question47:-இயந்திர அறைப் பதிவுப் புத்தகத்தில் (logbook) உள்ள அனைத்துத் தகவல்களும் துல்லியமானவை என்று ஒவ்வொரு நாளின் முடிவிலும் யார் சான்றளிக்க வேண்டும்?

A:-துறைமுக அதிகாரி

B:-படகின் தலைவர் (Chief of the boat)

C:-IV பொறியாளர் (IV Engineer)

D:-

படகோட்டி

Correct Answer:- Option-C

Question48:-படகைச் செலுத்தும் பணியில் (navigation) கண்காணிப்புப் பொறுப்பை ஏற்கும் பணியாளரின் மருத்துவத் தகுதிச் சோதனையில் எந்த அம்சம் மிகவும் கடுமையாகச் சரிபார்க்கப்படுகிறது ?

A:-உடல் உயரம்

B:-நீச்சல் வேகம்

C:-எடையைச் சுமக்கும் திறன்

D:-நிறங்களை வேறுபடுத்தி அறியும் திறன் (நிறப்பார்வை)

Correct Answer:- Option-D

Question49:-

நவீன நீர்வகலத்தின் (watercraft) பராமரிப்புப் பணிகளைச் சரியான நேரத்தில்

மேற்கொள்ளவும், அதன் விவரங்களைக் கணினியில் பதிவு செய்யவும் பயன்படும்

அமைப்பின் பெயர் என்ன?

A:-உலகளாவிய இடங்காட்டும் அமைப்பு (GPS)

B:-சமூக ஊடக வலைப்பின்னல்

C:-தானியங்கிப் பணப் பட்டுவாடா இயந்திரம் (ATM)

D:-ஆலை பராமரிப்பு அமைப்பு (Plant Maintenance System)

Correct Answer:- Option-D

Question50:-

கணினியில் தயாரிக்கப்பட்ட ஒரு முக்கியமான பாதுகாப்பு ஆவணக் கோப்பை (file),

எதிர்காலத்தில் எளிதாகக் கண்டறிய மிகவும் பொருத்தமான வழி எது?

A:-கோப்பிற்குத் துல்லியமான பெயரிட்டு, அதைத் தனிக் கோப்புறையில் (folder) சேமித்தல்

B:-அனைத்துக் கோப்புகளையும் கணினித் திரையில் (desktop) வைத்திருத்தல்

C:-பெயரிடாமல் சேமித்தல்

D:-சேமிக்காமல் விட்டுவிடுதல்

Correct Answer:- Option-A

Question51:-ஈயம்-அமில (lead-acid) மின்கலத்தில் ''சல்பேஷன்'' எனும் நிகழ்வு எப்போது ஏற்படுகிறது ?

A:-மின்கலம் முழுமையாக மின்னேற்றம் (charged) செய்யப்படும்போது

B:-மின்கலம் நீண்ட காலத்திற்கு மின்னிறக்கம் (discharged) செய்யப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருக்கும் போது

C:-மின்கலம் அதிக சுற்றுப்புற வெப்பநிலைக்கு உட்படுத்தப்படும்போது

D:-மின்கலம் அளவுக்கு அதிகமாக மின்னேற்றம் (overcharged) செய்யப்படும்போது

Correct Answer:- Option-B

Question52:-ஒரு மின்கலத்தில், அதன் அக மின்தடை (internal resistance):

A:-மின்கலம் மின்னிறக்கம் அடையும்போது குறைகிறது

B:-மின்கலத்தின் பயன்பாட்டுக் காலம் அதிகரிக்கும்போது (பழமையாகும் போது) அதிகரிக்கிறது

C:-மின்கலத்தின் வாழ்நாள் முழுவதும் மாறாமல் நிலையாக இருக்கிறது

D:-இரண்டாம்நிலை (secondary) மின்கலங்களுக்கு பூஜ்ஜியமாக இருக்கிறது

Correct Answer:- Option-B

Question53:-

ஒரு DC மோட்டார் செயல்படுவதற்கு உதவும் முதன்மையான கட்டமைப்பு வேறுபாடு எதன் இருப்பாகும்?

(i) கம்யூட்டேட்டர் மற்றும் பிரஷ் அமைப்பு

(ii) அணில் கூண்டு ரோட்டார்

(iii) சுழலும் காந்தப்புலத்தை உருவாக்கும் ஸ்டேட்டர்

A:-(i) மட்டும்

B:-(ii) மட்டும்

C:-(iii) மட்டும்

D:-(i & ii)

Correct Answer:- Option-A

Question54:-DC மோட்டாருடன் ஒப்பிடும்போது, அணில் கூண்டு தூண்டல் மோட்டார் (Squirrel cage induction motor):

A:-

பிரஷ்கள் இருப்பதால் அதிக பராமரிப்பு தேவைப்படுகிறது

B:-

குறைந்த நம்பகத்தன்மை கொண்டது

C:-

பிரஷ்கள் அல்லது கம்யூட்டேட்டர் இல்லாததால் குறைந்த பராமரிப்பு தேவைப்படுகிறது

D:-குறைவான இயந்திர வலிமை கொண்டது

Correct Answer:- Option-C

Question55:-ஏர் பிளாஸ்ட் சர்க்யூட் பிரேக்கரில், உயர் அழுத்த காற்று வீச்சு (high pressure air blast) எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது ?

(i) ஆர்க்கை ஆர்க் சட்களுக்குள் ஊதித் தள்ளுவதற்கு

(ii) தொடர்புகளைக் (contacts) குளிர்விப்பதன் மூலம் டைஎலக்ட்ரிக் வலிமையை

அதிகரிக்க

(iii) மின்னோட்ட ஓட்டத்தைத் தக்கவைக்க காற்று இடைவெளியை அயனியாக்கம்

செய்வதற்கு

A:-(i & ii) மட்டும்

B:-(i & iii) மட்டும்

C:-(i & iii) மட்டும்

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-A

Question56:-EHV (மிக அதிக மின்னழுத்தம் கொண்ட) சர்க்யூட் பிரேக்கர்களில் $SF_6$ வாயு ஏன் விரும்பப்படுகிறது?

(i) இது சிறந்த ஆர்க்-அணைக்கும் (arc-quenching) பண்புகளைக் கொண்டுள்ளது

(ii) இது அதிக எலக்ட்ரான்-எதிர்மறை (electronegative) தன்மை கொண்டது, அதாவது இது

கட்டற்ற எலக்ட்ரான்களைக் கவர்ந்து கொள்கிறது.
(iii) இது வேதியியல் ரீதியாக மந்தமானது மற்றும் நச்சுத்தன்மையற்றது

A:-(i & ii) மட்டும்

B:-(ii & iii) மட்டும்

C:-(i & iii) மட்டும்

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-D

Question57:-

ஒரு ஜெனரேட்டரின் ஸ்டேட்டர் வைண்டிங்கில் அவ்வப்போது 'மெக்கர்' (megger)

சோதனை செய்வது முக்கியமாக எதைக் கண்டறிய மேற்கொள்ளப்படுகிறது?

A:-மோட்டாரில் உள்ள இயந்திர சமநிலையின்மை (Mechanical imbalance)

B:-

ஈரப்பதம் அல்லது காலப்போக்கில் ஏற்படும் காப்புத் திறனின் (insulation resistance)

சிதைவு

C:-வெளியீட்டு மின்னழுத்தத்தில் ஏற்படும் ஹார்மோனிக் சிதைவு (Harmonic distortion)

D:-தாங்கிகளில் (bearings) ஏற்படும் மசகு எண்ணெய் மாசுபடுதல்

Correct Answer:- Option-B

Question58:-கம்யூட்டேட்டரின் மேற்பரப்பை அவ்வப்போது மெருகூட்டுவதன் (polishing) முதன்மை நோக்கம் என்ன?

A:-காந்தப் பாய்வை (magnetic flux) அதிகரித்தல்

B:-சீரான மின்னோட்ட சேகரிப்பை பராமரித்தல் மற்றும் பிரஷ் (brush) தேய்மானத்தைக் குறைத்தல்

C:-வெளியீட்டு மின்னழுத்தத்தை அதிகரித்தல்

D:-தாங்கி உராய்வைக் (bearing friction) குறைத்தல்

Correct Answer:- Option-B

Question59:-மிக அதிக மின்னழுத்த (EHV) கேபிள்களுக்கு, ஏன் ''எண்ணெய் நிரப்பப்பட்ட'' (oil-filled) கேபிள் விரும்பப்படுகிறது ?

(i) சுய-சரிசெய்தல் (self-healing) பண்புகள் மூலம் காப்புப்பகுதியில் உள்ள

வெற்றிடங்களை நீக்க

(ii) கடத்திகளுக்கு (conductors) சிறந்த குளிர்ச்சியை வழங்க

(iii) கேபிளை நெகிழ்வுத்தன்மை கொண்டதாக மாற்ற

A:-(i & ii) மட்டும்

B:-(ii & iii) மட்டும்

C:-(i & iii) மட்டும்

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-A

Question60:-அதிக மின்னழுத்த கேபிள்களை இணைக்கும்போது, உலோகத்திரை (metallic screen) முக்கியமாக எதற்காக மீண்டும் இணைக்கப்படுகிறது?

A:-கடத்தியின் மின்னோட்டத் திறனை அதிகரிக்க

B:-கேபிளின் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்த

C:-கடத்தியின் மின்தடையைக் குறைக்க

D:-எர்த்தொடர்பைத் தொடரச் செய்யவும் மற்றும் மின்புலத்தை (electric field) சரியாகக் கட்டுப்படுத்தவும்

Correct Answer:- Option-D

Question61:-ஒரு இயந்திரத்தின் B.H.P. (பிரேக் குதிரைத்திறன்) அளவிட எந்தக் கருவி பயன்படுத்தப்படுகிறது?

A:-அம்மீட்டர்

B:-பைரோமீட்டர்

C:-டைனமோமீட்டர்

D:-மேற்கூறிய எதுவும் இல்லை

Correct Answer:- Option-C

Question62:-ஒரு AC மின் அமைப்பில், அதிர்வெண் (Frequency) என்பது இவ்வாறு வரையறுக்கப்படுகிறது

A:-ஒரு முழுமையான சுழற்சிக்கு (cycle) எடுத்துக்கொள்ளப்படும் நேரம்

B:-ஒரு வினாடியில் நிகழும் சுழற்சிகளின் எண்ணிக்கை (இது ஹெர்ட்ஸ்-Hz அலகில் அளவிடப்படுகிறது)

C:-மின்னழுத்த அலையின் (voltage wave) அதிகபட்ச வீச்சு (amplitude)

D:-கட்டக் கோணத்தின் (phase angle) மாறுபாட்டு வீதம்

Correct Answer:- Option-B

Question63:-இயந்திரத்தால் உருவாக்கப்படும் ஆற்றல் எந்தப் பாகத்தின் மூலம் ஃப்ளைவீலுக்கு (flywheel) கடத்தப்படுகிறது?

A:-இணைக்கும் தண்டு (Connecting rod)

B:-கிராங்க்ஷாஃப்ட் (Crankshaft)

C:-எரிபொருள் உட்செலுத்தி (Fuel injector)

D:-ஃப்ளைவீல்

Correct Answer:- Option-B

Question64:-நீர்சார்ந்த வாகனங்களின் (watercraft) இயந்திரங்களில் பொருத்தப்படும் குளிரூட்டும் அமைப்பு எது?

A:-காற்று குளிரூட்டல்

B:-எண்ணெய் குளிரூட்டல்

C:-

நீர் குளிரூட்டல்

D:-

மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-D

Question65:-நீர்சார்ந்த வாகனத்தின் திசையைக் கட்டுப்படுத்தப் பயன்படும் சாதனம் எது?

A:-ரேடார்

B:-சுக்கான் (Rudder)

C:-பைனாகுலர்

D:-எதிரொலி ஒலிமானி (Echo sounder)

Correct Answer:- Option-B

Question66:-ஒரு நீர்சார்ந்த வாகனம் எவ்வளவு கால இடைவெளிக்குள் உலர்-தளத்திற்கு (dry-dock) கொண்டு செல்லப்பட வேண்டும்?

A:-ஐந்து ஆண்டுகளுக்கு இருமுறை

B:-ஒவ்வொரு ஆண்டும்

C:-பத்து ஆண்டுகளுக்கு இருமுறை

D:-மூன்று ஆண்டுகளுக்கு இருமுறை

Correct Answer:- Option-A

Question67:-
கப்பல்களில் எந்த வகையான வர்ணம் (paint) பயன்படுத்தப்படுகிறது?

A:-ஆன்டி-ஃபவுலிங் பெயிண்ட்

B:-எனாமல் பெயிண்ட்

C:-எமல்ஷன் பெயிண்ட்

D:-டிஸ்டெம்பர் பெயிண்ட்

Correct Answer:- Option-A

Question68:-நீர்சார்ந்த வாகனத்தின் 'சீ-செஸ்ட்' வால்வாக (sea-chest valve) எந்த வகையான வால்வு பயன்படுத்தப்படுகிறது?

A:-குளோப் வால்வு

B:-செக் வால்வு

C:-பட்டர்பிளை வால்வு

D:-நீடில் வால்வு

Correct Answer:- Option-A

Question69:-இரவில் எரிபொருள் நிரப்பும் பணி (bunkering operation) நடைபெறும்போது, நீர்சார்ந்த வாகனம் எந்த நிற ஒளியைக் காட்ட வேண்டும்?

A:-சிவப்பு

B:-மஞ்சள்

C:-பச்சை

D:-மேற்கூறிய எதுவும் இல்லை

Correct Answer:- Option-A

Question70:-அதிக பாகுத்தன்மை (viscosity) கொண்ட சரக்கை வெளியேற்ற நீர்சார்ந்த வாகனங்களில் எந்த வகையான பம்ப் பயன்படுத்தப்படுகிறது ?

A:-ஜெட் பம்புகள்

B:-கியர் பம்புகள்

C:-மையவிலக்கு (centrifugal) பம்புகள்

D:-ப்ரோப்பல்லர் பம்புகள்

Correct Answer:- Option-B

Question71:-ஒரு கப்பலின் இயந்திரம், ஜெனரேட்டர் மற்றும் பிற இயந்திரங்களுக்கான பராமரிப்பு மற்றும் செயல்பாட்டு நடைமுறைகளைத் தொடங்குவதற்கு முன், பின்வருவனவற்றுள் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எது?

A:-இயந்திரங்கள் மின்சார விநியோகத்திலிருந்து முழுமையாகத் துண்டிக்கப்பட்டிருப்பதை தகுதி வாய்ந்த பொறியாளர் உறுதி செய்ய வேண்டும்.

B:-மேலே குறிப்பிடப்பட்ட உபகரணத்தின் மீது தகுந்த எச்சரிக்கை அறிவிப்புகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

C:-தொடர்புடைய இயந்திரங்களின் வெப்பநிலை மற்றும் அழுத்தத்தை பாதுகாப்பான இயக்க நிலைக்குக் கொண்டு வர வேண்டும்

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-D

Question72:-கப்பலின் 'ரடர் டிராப்' (Rudder Drop) அளவை அளவிட எந்தக் கருவி பயன்படுத்தப்படுகிறது?

A:-ரடர் ட்ராமல் கேஜ்

B:-ரடர் பின்டில்

C:-ரடர் கட்ஜியன்

D:-ரடர் ஸ்டாக்

Correct Answer:- Option-A

Question73:-
கப்பலில் உள்ள டீசல் இயந்திரத்தின் வழக்கமான பராமரிப்புப் பணிகள் குறித்த சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்:

A:-
திட்டமிடப்பட்ட பராமரிப்பு நடைமுறையின்படி, காற்று வடிகட்டி (air filter), உயவு எண்ணெய் வடிகட்டி (L.O. filter) மற்றும் எரிபொருள் எண்ணெய் வடிகட்டி (fuel oil filter) ஆகியவற்றைச் சுத்தம் செய்ய வேண்டும்.

B:-திட்டமிடப்பட்ட பராமரிப்பு நடைமுறையின்படி, சம்பில் (sump) உள்ள உயவு எண்ணெயை (L.O.) மாற்ற வேண்டும்.

C:-மேற்கூறிய அனைத்தும்.

D:-மேற்கூறிய எதுவும் இல்லை.

Correct Answer:- Option-C

Question74:-கப்பலின் டீசல் இயந்திரத்தை இயக்க முடியவில்லை (ஸ்டார்ட் ஆக வில்லை). இதற்கான சாத்தியமான காரணங்களில் ஒன்றாக இல்லாதது எது?

A:-ஸ்டார்ட்டர் மோட்டார் அல்லது அது தொடர்பான மின் வயரிங்கில் கோளாறு

B:-வால்வு டைமிங் (Valve timing) தவறாக இருக்கலாம்.

C:-எக்கோ சவுண்டர் (Echo sounder) வேலை செய்யாமல் இருக்கலாம்.

D:-காற்று உள்வாங்கும் அமைப்பில் (Air Intake System) அடைப்பு இருக்கலாம்

Correct Answer:- Option-C

Question75:-கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எவை சரியானவை ?
i. டீசல் இயந்திரத்தின் சிலிண்டர் ஹெட் (Cylinder Head) அல்லது சிலிண்டர் கவர் (Cylinder Cover), எரிப்புஅறை (Combustion Chamber) ஆகியவற்றுடன் இணைந்து, எரிப்பு செயல்முறை நடைபெறுவதற்குத் தேவையான மூடிய இடத்தை உருவாக்குகிறது/ மூடுகிறது.
ii. டீசல் இயந்திரத்தின் சிலிண்டர் ஹெட்டில் காற்று உள்நுழைவு வால்வு (Air Inlet Valve), வெளியேற்ற வால்வு (Exhaust Valve), எரிபொருள் வால்வு (Fuel Valve), ரிலீஃப்வால்வு (Relief Valve) மற்றும் ஸ்டார்ட்டிங் ஏர் வால்வு (Staring Air Valve) போன்ற பல்வேறு பாகங்கள் பொருத்தப்பட்டுள்ளன.
iii. கிராங்க்ஷாஃப்ட் (Crankshaft) கிராங்க்கேஸுக்கு (Crankcase) வெளியே பொருத்தப்பட்டுள்ளது.
iv. கவர்னரின் முக்கிய செயல்பாடு டீசல் இயந்திரத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதாகும்.

A:-(i & ii) மட்டும்

B:-(i, ii & iii) மட்டும்

C:-(i, ii & iv) மட்டும்

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-C

Question76:-
கப்பலின் இயந்திர அறையில் உள்ள எரிபொருள் குழாயில் எரிபொருள் கசிவு கண்டறியப்பட்டால், பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் மாசுகட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின் பற்றி மேற்கொள்ளப்பட வேண்டிய சரியான செயல்முறை வரிசை எது?

A:-உடனடியாக எரிபொருள் விநியோகத்தை நிறுத்தவும். சூழ்நிலை தேவைப்பட்டால், மாஸ்டர்க்கு தெரிவித்த பிறகு இயந்திரத்தை நிறுத்தவும்.

B:-எரிபொருள் கசிவு ஏற்படும் இடத்தைக் கண்டறிந்து, சேதமடைந்த பாகத்தை பாதுகாப்பாகத் தனிமைப்படுத்தவும் அல்லது அகற்றவும்.

C:-தேவைப்பட்டால், சேதமடைந்த பாகத்தைப் பழுது பார்க்கவும் அல்லது அதை ஒரு புதிய பாகத்தைக் கொண்டு மாற்றவும்.

D:-
பழுதுபார்ப்பு முடிந்த பிறகு, கசிவு முழுமையாக நின்றுவிட்டது என்பது உறுதி செய்யப்படும் வரை இன்ஜினை மீண்டும் இயக்க வேண்டாம்.

Correct Answer:- Option-D

Question77:-ஒரு கப்பலின் டீசல் முதன்மை இன்ஜினின் சிலிண்டர் ஹெட் பிளாக்கை (Cylinder head block) பிரித்து முழுமையாகப் பராமரிக்கும் போது (overhauling), பின்வருவனவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய சரியான நடவடிக்கை எது?

A:-ஜாக்கெட் குளிரூட்டும் நீர் உள்வரும் மற்றும் வெளியேறும் வால்வுகளை மூடவும்; ஜாக்கெட் யூனிட்டின் எரிபொருள் குழாய் வால்வுகளைத் துண்டிக்கவும்; ஒவ்வொரு யூனிட்டின் உயர் அழுத்த எரிபொருள் குழாய்களை அகற்றவும்; எரிபொருள் வால்வு சீட் (seat) கிளாம்புகளை அகற்றவும்.

B:-ஸ்டார்ட்டிங் ஏர் (starting air) மற்றும் எக்ஸ்ஹாட் மேனிஃபோல்டுகளை (exhaust manifolds) அகற்றவும்; சிலிண்டர் ஹெட் கவரைத் திறந்து ராக்கர் ஆர்ம் அமைப்பை (rocker arm assembly) அகற்றவும்; சிலிண்டர் ஹெட்டை ஹோல்டிங் போல்ட்களை அகற்றவும்; சிலிண்டர் ஹெட் தொகுதியை மேலே தூக்கவும்.

C:-பொருத்தமான கருவியைப் பயன்படுத்தி, வால்வு ஸ்பிரிங் கம்ப்ரஸரை அகற்றி லாக் ரிங்குகளைத் (lock rings) தளர்த்தவும்; ஸ்பிரிங்குகளைத் தளர்த்தவும்.

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-D

Question78:-
எரிபொருள் நிரப்பும் பணிகளின் (bunkering operations) போது எண்ணெய் மாசுபாட்டைத் தடுக்க எடுக்கப்பட வேண்டிய சரியான நடவடிக்கை எது?

i. உட்புறத் தொட்டியின் வழிதல் தடுப்பு அமைப்பு (overflow protection) சரியாக இருப்பதை உறுதி செய்யவும்; பணியைத் தொடங்கும் முன் அதை ஆய்வு செய்யவும்.
ii. டெக் (deck) தளத்தில் உள்ள அனைத்து திறப்புகளையும் (scuppers) பிளக்குகள் (plugs) மூலம் மூடவும் அல்லது மறைக்கவும். குழாய் இணைப்புகளுக்குக் கீழே பொருத்தமான இடங்களில் சொட்டுத் தட்டுகளை (drip trays) வைக்கவும். தொட்டியின் காற்றோட்டத் திறப்புகள் (vent openings) அடைக்கப்படாமலோ அல்லது மூடப்படாமலோ இருப்பதை உறுதி செய்யவும்.
iii. தேவையான அனைத்து ஃபிளாஞ்சுகளும் (flanges) மற்றும் அடைப்பான்களும் (bungs) சரியாகப் பொருத்தப்பட்டுள்ளதா எனச் சரிபார்க்கவும்; தொட்டியின் திரவமட்ட அளவீடுகள் (soundings) தொடர்ந்து எடுக்கப்பட வேண்டும்.
iv. SOPEP (கப்பலில் எண்ணெய் மாசுபாடு அவசரக்காலத் திட்டம்) கருவித்தொகுப்பு பயன்பாட்டிற்குத் தயாராக இருக்க வேண்டும்.

A:-(i, ii & iii) மட்டும்

B:-மேலே உள்ள அனைத்தும்

C:-(i, iii & iv) மட்டும்

D:-(i, ii & iv) மட்டும்

Correct Answer:- Option-B

Question79:-
பின்வருவனவற்றில் சரியான கூற்றுகளை அடையாளம் காணவும்:
i. டீசல் இயந்திரம் இயங்கும் போது, பிஸ்டன் வளையங்கள் மற்றும் சிலிண்டர் லைனர்களுக்கு இடையிலும், ஷாஃப்ட் பேரிங் உலோகம் மற்றும் கியர்பற்கள்/பினியன் பற்களுக்கு இடையிலும் உராய்வு ஏற்படுகிறது. இப்பகுதிகளுக்கு உயவு எண்ணெய் (lubricating oil) கிடைக்கவில்லை என்றால், உராய்வு கணிசமாக அதிகரித்து இயந்திரத்தை சேதப்படுத்தக்கூடும்.
ii. மெக்கர் சோதனை (Magger Testing) என்பது இயந்திர அதிர்வைச் சரிபார்க்க அவ்வப்போது நடத்தப்படும் ஒரு முறையான சோதனையாகும்; அதன் அளவீடுகள் இயந்திரத்தின் பதிவுப் புத்தகத்தில் (log book) பதிவு செய்யப்பட வேண்டும்.
iii. இயந்திரத்தின் கிராங்க்ஷாஃப்ட்டுக்கான (crankshaft) உயவு எண்ணெய் கீழே உள்ள 'சம்ப்' (sump) பகுதியில் சேமிக்கப்படுகிறது; இது கிராங்க்கேஸ் எண்ணெய் (crankcase oil) என்றும் அழைக்கப்படுகிறது.
iv. எந்தவொரு உள் எரிப்பு இயந்திரத்தையும் (internal combustion engine) தொடங்குவதற்கு முன், சிலிண்டர்களுக்குள் தண்ணீர், எண்ணெய் அல்லது பிற தடைகள்

எதுவும் சேரவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் இது 'கிராங்கிங் தி இன்ஜின்' (cranking the engine) என்று அழைக்கப்படுகிறது.

A:-(i, ii & iii) மட்டும்

B:-
(i, ii & iv) மட்டும்

C:-(ii, iii & iv) மட்டும்

D:-(i, iii & iv) மட்டும்

Correct Answer:- Option-D

Question80:-
கடலோரக் கப்பல்களுக்குப் பொருந்தக் கூடிய வணிகக் கப்பல் போக்குவரத்து (மாசுதடுப்பு) விதிகள், 2022 (2025-ல் திருத்தப்பட்டது)-ன் அடிப்படையில், கீழே கொடுக்கப்பட்டுள்ள தவறான கூற்றை/கூற்றுகளை அடையாளம் காணவும்:

i. மாசு கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் 'இந்திய தரநிலைகள் பணியகம்' (Bureau of Indian Standards) அல்லதுசர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தல் அமைப்பால் அங்கீகரிக்கப் பட்டதாகவோ அல்லது அவற்றின் தரநிலைகளைப் பூர்த்தி செய்வதாகவோ இருக்க வேண்டும்.

ii. கடலோரக் கப்பல்களில் பயன்படுத்தப்படும் கடல்சார் எரிபொருள் எண்ணெய் அல்லது டீசலில் உள்ள கந்தகத்தின் (sulphur) அளவு 0.5% m/m-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

iii. ஒவ்வொரு கடலோரக் கப்பலும் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் படி சுகாதார அமைப்பிற்கு ஏற்ற கழிவு சேமிப்புத் தொட்டியைக் (holding tank) கொண்டிருக்க வேண்டும்; இருப்பினும், இச்சட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ள அல்லது ஏற்கனவே உள்ள கப்பல்களுக்குப் பொருந்தாது.

iv. போதுமான திறந்த வழித்தடங்கள் அல்லது வெளியேறும் வழிகள் இல்லாத கடலோர நீர் நிலைகளில், எண்ணெய் மாசுபாடு அல்லது இரசாயனக் கசிவு தொடர்பான ஏதேனும் சம்பவம் நிகழ்ந்தாலோ அல்லது நடந்து கொண்டிருந்தாலோ, அது பொருந்தக்கூடிய விதிமுறைகளின் படி கேரள கடல்சார் வாரியத்திற்கும் (Kerala Maritime Board), சட்டப்படி தேவைப்படும் பிற தொடர்புடைய அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

A:-(i, ii) மட்டும்

B:-(ii) மட்டும்

C:-(iii) மட்டும்

D:-(i & iv) மட்டும்

Correct Answer:- Option-C

Question81:-'பிரத்யக்ஷ ரக்ஷ தெய்வ சபா' எனப்படும் மறுமலர்ச்சி இயக்கத்தின் நிறுவனர் யார் ?

A:-சுபாநந்தா குரு தேவன்

B:-சாவரா குரியாக்கோஸ் எலியாஸ்

C:-கண்டத்தில் வர்கீஸ் மாப்பிள்ளை

D:-பொய்கையில் யோஹன்னன்

Correct Answer:- Option-D

Question82:-பெரினாடு கிளர்ச்சிக்கு தலைமை தாங்கியவர் யார்?

A:-பண்டிட் கருப்பன்

B:-அய்யன்காளி

C:-டாக்டர் பல்பு

D:-குமாரனாசான்

Correct Answer:- Option-B

Question83:-K2 சிகரம் எந்த மலைத் தொடரைச் சேர்ந்தது?

A:-மேற்குத் தொடர்ச்சி மலைகள்

B:-கிழக்குத் தொடர்ச்சி மலைகள்

C:-ஆரவல்லி

D:-காரகோரம்

Correct Answer:- Option-D

Question84:-இந்தியாவின் முக்கிய பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டமான சர்தார் சரோவர் திட்டம் எந்த ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ளது?

A:-மகாநதி

B:-கோதாவரி

C:-

நர்மதை

D:-காவிரி

Correct Answer:- Option-C

Question85:-தென்மேற்குப் பருவமழைக் காலத்துடன் தொடர்புடைய காரிஃப் (kharif) பருவத்தின் முக்கிய விவசாயப் பயிர் எது?

A:-கோதுமை

B:-நெல் (அரிசி)

C:-பயறு வகைகள்

D:-புகையிலை

Correct Answer:- Option-B

Question86:-
''நிராமய ஆரோக்கிய காப்பீட்டுத் திட்டம்'' (Niramaya Health Insurance Scheme)

எதனுடன் தொடர்புடையது ?

A:-
மாநிலத்தின் மிக ஏழ்மையான (வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள) மக்களுக்கு மருத்துவக்

காப்பீடு வழங்கும் திட்டம்.

B:-மாநிலத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவக் காப்பீடு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட திட்டம்.

C:-
மாநிலத்தின் ஆதரவற்ற முதியவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் காப்பீட்டுப் பாதுகாப்பை

வழங்கும் திட்டம்.

D:-புற்றுநோய் நோயாளிகளுக்குக் காப்பீட்டுப் பாதுகாப்பை வழங்கும் திட்டம்.

Correct Answer:- Option-B

Question87:-பின்வருவனவற்றுள் எது தார் பாலைவனத்தின் இயற்கையான எல்லைப் பரப்பிற்குள் வராது?

A:-வடக்கு - சட்லஜ் நதிப் படுகை

B:-
மேற்கு- சிந்து நதிப் படுகை

C:-
தெற்கு - கட்ச் பாலைவனம் (ரன் ஆஃப் கட்ச்)

D:-கிழக்கு - சுந்தரவன டெல்டா

Correct Answer:- Option-D

Question88:-இந்தியாவின் கிழக்குக் கடற்கரைச் சமவெளி குறித்த பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?

i. இது கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையில் அமைந்துள்ளது.

ii. இது மகாநதி டெல்டா பகுதியிலிருந்து கன்னியாகுமரி வரை பரந்து காணப்படுகிறது.

iii. வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் முக்கிய இடங்கள்/குடியிருப்புகள் நெவாசேசா மற்றும் மோர்மகோவா படுகைப் பகுதிகளில் அமைந்துள்ளன.

A:-(i, ii) மட்டும்

B:-(ii, iii) மட்டும்

C:-(i, ii, iii) அனைத்தும் சரி

D:-(i, iii) மட்டும்

Correct Answer:- Option-A

Question89:-

கேரளாவிற்குள் பாயும் இரண்டாவது மிக நீளமான நதி எது?

A:-

பாரதப்புழா

B:-சாலியார் நதி

C:-மஞ்சேஸ்வர் நதி

D:-பெரியாறு

Correct Answer:- Option-A

Question90:-பின்வரும் தலைவர்களில் யார் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்துடன் தொடர்புடையவர் அல்ல?

A:-அருணா ஆசஃப் அலி

B:-ஜெயப்பிரகாஷ் நாராயணண்

C:-

லாலா லஜபதி ராய்

D:-ராம் மனோகர் லோஹியா

Correct Answer:- Option-C

Question91:-16-வது கேரள சட்டமன்றத்தின் கல்வி அமைச்சர் யார் ?

A:-ஏ. பி. அனில்குமார்

B:-ஓ. ஜே. ஜனீஷ்

C:-என். சம்சுதீன்

D:-கே. ஏ. துளசி

Correct Answer:- Option-C

Question92:-ஜனவரி 7, 2026 அன்று காலமான புகழ்பெற்ற சுற்றுச்சூழல் விஞ்ஞானி யார்?

A:-
எம்.எஸ். சுவாமிநாதன்

B:-மாதவ் காட்கில்

C:-எம். ஆர். சீனிவாசன்

D:-கஸ்தூரி ரங்கன்

Correct Answer:- Option-B

Question93:-
மக்கள் தொகை பற்றிய ஆய்வு என்னவென்று அழைக்கப்படுகிறது ?

A:-புவியியல்

B:-டெமோகிராபி

C:-உளவியல்

D:-மானுடவியல்

Correct Answer:- Option-B

Question94:-கேரளாவின் மிக உயரமான சிகரம் எது?

A:-அகஸ்தியர்கூடம்

B:-ஆனைமுடி

C:-வயநாடு

D:-மீசபுலிமாலா

Correct Answer:- Option-B

Question95:-இந்திய தேசிய காங்கிரஸின் உருவாக்கம் தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது சரியானது அல்ல ?

i. இந்திய தேசிய காங்கிரஸ் 1855 இல் நிறுவப்பட்டது.

ii. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் அமர்வு கல்கத்தாவில் நடைபெற்றது.

iii. W.C. பொன்னர்ஜி இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவராக இருந்தார்.

A:-i மட்டும்

B:-ii மட்டும்

C:-iii மட்டும்

D:-i, ii மற்றும் iii தவறானவை

Correct Answer:- Option-B

Question96:-சௌரி சௌரா சம்பவத்தைத் தொடர்ந்து, காந்திஜி எந்த இயக்கத்தைத் திரும்பப் பெற்றார் ?

A:-சுதேசி இயக்கம்

B:-வெள்ளையனே வெளியேறு இயக்கம்

C:-ஒத்துழையாமை இயக்கம்

D:-கீழ்ப்படியாமை இயக்கம்

Correct Answer:- Option-C

Question97:-சைலண்ட் வேலி தேசிய பூங்கா எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A:-இடுக்கி

B:-வயநாடு

C:-கண்ணூர்

D:-பாலக்காடு

Correct Answer:- Option-D

Question98:-

'ஆத்மானுதபம்' என்ற இலக்கியப் படைப்பை எழுதியவர் யார்?

A:-ஸ்ரீ நாராயண குரு

B:-குரியாக்கோஸ் ஏலியாஸ் சாவரா

C:-பிரம்மானந்த சிவயோகி

D:-
குமாரன் ஆசான்

Correct Answer:- Option-B

Question99:-‘மித்ர போஜன‘ இயக்கத்தை நிறுவியவர் யார்?

A:-அய்யன்காளி

B:-சகோதரன் அய்யப்பன்

C:-வி.டி. பட்டத்திரிபாட்

D:-வாக்படானந்தா

Correct Answer:- Option-B

Question100:-''கல்வி மூலம் அறிவொளி பெறுங்கள்'' என்ற செய்தியை வழங்கியது கேரளாவின் எந்த சமூக சீர்திருத்தவாதி?

A:-அய்யா வைகுண்டர் சுவாமிகள்

B:-பண்டிட் கே.பி. கருப்பன்

C:-சட்டம்பி சுவாமிகள்

D:-ஸ்ரீ நாராயண குரு

Correct Answer:- Option-D